செய்தி வெளியீடு எண்: 584 நாள்:09.08.2021

# செய்தி வெளியீடு

## தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஆயிரம் விளக்கு தியாகராயர் நகர் மற்றும் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிகளில் கட்டப்பட்டுள்ள பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் அதனைச் சார்ந்த குடிசைப்பகுதிகளையும் மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

----------

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன்அவர்கள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நுங்கம்பாக்கம் சுதந்திரா நகர் அடுக்குமாடிக் குடியிருப்பு திட்டப்பகுதியில் அமைந்துள்ள 576 பழைய அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் திட்டப்பகுதிக்குப் பின்புறம் உள்ள குடிசைப் பகுதிகள், 29 கீரிம்ஸ் சாலையில் உள்ள குடிசைப்பகுதி, நக்கீரர் நகர் பழைய அடுக்குமாடிக் குடியிருப்பு , சிவசண்முகப்புரம் பழைய அடுக்குமாடிக் குடியிருப்பு, எம்.கே ராதா நகர் தீப்பிடிக்காத கல்நார் குடியிருப்புகளுக்கு நேரிடையாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் தியாகராய நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காமராஜர் காலனி, லலிதாபுரம் மற்றும் விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே.கே.நகர் திட்டப்பகுதியில் உள்ள சிவலிங்கபுரத்திலுள்ள குடியிருப்புகளுக்குச் சென்று ஆய்வு மேற்கொண்டதுடன் குடியிருப்புப் பகுதிகளில் ஏற்படுத்தபட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்துப் பொது மக்களிடம் நேரிடையாகக் கேட்டறிந்தார்.

ஆய்வுக்குப் பின்பு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கையில் 1970 ஆம் ஆண்டு சென்னையில் கட்டப்பட்டுத் தற்போது சிதிலமடைந்துள்ள ஆயிரக்கணக்கான அடுக்குமாடி வீடுகள் அனைத்தும் புனரமைக்கப்படும். மிகவும் சிதிலடைந்துள்ள வீடுகளை இடித்து அதே இடத்தில் நவீனத் தொழில்நுட்பத்துடன் தனியார் அடுக்குமாடிக் குடியிருப்புகளைப் போலத் தரமான கட்டிடங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மேலும் பட்டினம்பாக்கத்தில் கட்டப்பட்ட வீடுகளை அங்குள்ள மக்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியக் குடியிருப்புகளில் கழிவுநீர் கால்வாய்கள் அமைப்பதற்கும் சுகாதாரமான குடிநீர் கிடைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் குடியிருப்புகளுக்கு மின்சாரம் தடையின்றி வழங்கப் புதிய திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளதாகவும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் மூலம் மாற்று வீடுகள் கட்டித்தரப்படும் வரை மக்களுக்கு வழங்கப்படும் ரூ.8000 உதவித்தொகையானது உயர்த்தி தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆய்வில் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.மா.கோவிந்தராவ் இ.ஆ.ப அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.எழிலன், திரு.ஜே.கருணாநிதி, திரு.வி.பிரபாகரராஜா, வாரியத் தலைமைப் பொறியாளர் திரு.இராம சேதுபதி, மேற்பார்வைப் பொறியாளர் திரு.சா.சுந்தரராஜன், நிர்வாக பொறியாளர்கள் திரு.சந்திர மோகன், திரு. சேகர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**